# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2010
மார்கழி 8
ஸபர் 3
ஞாயிறு (23-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 58
விலை சதம் 75


பத்திரிகைத் தணிக்கை யாழ் மாவட்டத்தில் மட்டும் இப்போது நடைமுறையில் இருக்கவில்லை. கொழும்பிலும் நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. கொழும்பில் தணிக்கை அதிகாரியாக திரு. சரத் அமுனுகம கடமையாற்றுகிறார். இடதுசாரிப் பத்திரிகைகளில் வெளிவரும் சில பகுதிகள் கொழும்பிலும் தணிக்கை செய்யப்படுகின்றன. பத்திரிகைத் தணிக்கைச் சட்டத்தின்கீழ், கொழும்பிலிருந்து வெளியிடப்பட்ட 1979 நவம்பர் மாத்ருபூமி'சிங்கள இதழில் வெளிவந்து சிங்கள மக்களால் படிக்கப்பட்டு விட்ட சில செய்திகளை தமிழ் மக்களும் அறிவதற்காக தமிழில் அப்படியே இங்கு தருகிறோம். அதே சமயம் இச்செய்திக்கு சுதந்திரன் அப்படியே உத்தரவாதம் தரவில்லையென்பதை அறியத்தருவதுடன் சிங்கள மக்களிடையே எவ்வாறு தமிழ்த்துவேஷம் ஊட்டப்பட்டுவருகிறதென்பதை எடுத்துக்காட்டவே இதை இங்கு வெளியிடுகிறோம். —ஆர்.

# 'புலிப்படை மாக்சீயவாதிகளுடன் இணைகிறதாம்! ஆயுதப் போராட்டத்துக்கும் ஆயத்தமாம்!"

'மாத்ருபூமி' சிங்கள இதழின் தலைப்புச்செய்தி!

புலிப்படையினரால் வெளிநாட்டில் அச்சிடப்பட்டதாகக் கருதப்படும் 8 பக்கங்களைக்கொண்ட தமிழ் நூலொன்று தற்போது 'ஒருவிதமான' அமைச்சரின் முத்திரை பொறித்த அரச பணி கடித உறைகளுள்வைத்து ஆயிரக்கணக்கில் அரசாங்க—தனியார்துறை நிறுவனங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளின் பெயருக்கு அனுப்பப்படுகிறது.

எமது (மாத்ருபூமி) இரகசியச் செய்தி நிறுவனத்தால் பெறப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான அந்தநூலின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

தணிக்கை

தணிக்கை

"எமது இனத்தின் விடுதலைப்போராட்டம் லெனினது மாக்சீயவாதக் கற்பித்தலுக்கேற்பவே நடாத்தப்பெறும்."

தணிக்கை

இயந்திரமாகச் செயற்படுவதால் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதனைத் தகர்த்தெறிய வேண்டும்"

"எமக்கு வேறான அரசியல் கட்சி அவசியமானது அல்ல. நாம் பாராளுமன்ற முறையைப் பின்பற்ற மாட்டோம். கம்யூனிஸ்டுகள் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும், அதன் பின்னர் நாம் ஒரு பொது வேலை திட்டத்தின்கீழ் கொள்கைப் பிடிப்புடன் இணைந்து கரும மாற்றுவோம்"

"தமிழ் ஈழத்துக்கு பூரண சுயாட்சி, கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் மக்கள் பொருளாதாரத்திட்டத்தை அளித்தல் என்பன எமது பிரதான நோக்கங்கள் ஆகும். இவற்றைவென்றெடுப்பதற்காக நாம் ஆயுதம் ஏந்தும்

—8-ம் பக்கம் பார்க்க

## 'மாத்ருபூமி'யில் சிங்களமொழியில் வெளியிடப்பட்ட
# தமிழ் விடுதலைக் கீதம்

தணிக்கை

ஒருதரம் மட்டுந்தான்!
நாம் சிரித்துக் கொண்டே மரணமஞ்சத்தில்
[துயில்வோம்;

தணிக்கை

உரத்த குரலில் உதய கீதம் இசைத்திடுவோம்:
வயிற்றை நிரப்பிடவா நாம் வாழ்வெடுத்தோம்
போலி வீரர் மறைந்திடுவர்.
தமிழனே! மானங்காக்க உறுதியுடன் போரிடுவாயா?
நாற்றிசைகளும் நடுங்கிட
நாம் எழுந்து முன் செல்வோம்
தமிழ் அன்னை கண்ணீர் வடித்துச் சோர்ந்தனள்
எமது அழகிய நாடும் சிதறுண்டது:
புராண சேர சோழ பாண்டியர்களே!
உயிர்த்தெழுங்கள்!
தமிழ் அன்னை உங்களை வளர்த்திட்டாள்!
அவள் ஊட்டிய பால், அது வீணாகலாமா?
விழித்தெழு! சுதந்திரம் கடைச்சரக்கல்ல!
மேடைப் பேச்சு கவைக்குதவாது
புடலங்காய்களே! ஒதுங்கி நில்லுங்கள்
நாம் போர்க்களம் புகுந்து விட்டோம்.
தமிழா! உன் உடலையும் உயிரையும் தியாகம்செய்!
உனது தலையைக் கொடுத்து சுதந்திரம் பெறு!

—காசி ஆனந்தன் எழுதியது என்ற குறிப்புடன் 1979 நவம்பர் மாத்ரு பூமி மேற்படி கவிதையை சிங்களத்தில் வெளியிட்டுள்ளது;


මාතෘභූමි

සිංහල ජාතියේ උරුමය රැකීම සඳහා කැපවුණු එකම පත්‍රය


1 වැනි කාණ්ඩය ● 10 වෙනි පත්‍රය ● ශ්‍රී: බු: ව: 2523 ක්‍රි: ව: 1979 නොවැම්බර් මිල රු: 1.00

කොටි කල්ලිය මාක්ස් වාදීන්ට පේනතු වෙයි!

ආයුධ සන්නද්ධ කැරළි ගැසීමක්

තවත් බිල්ලක්!

1979 நவம்பரில் வெளிவந்த 'மாத்ருபூமி' இதழின் முகப்புத் தோற்றம்.




எஸ். சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்.

கே: சுதந்திரக் கோரிக்கைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஏதும் இருக்க முடியுமா?

ப: சுதந்திரக் கோரிக்கைக்கு ஈடாக மாற்றுத் திட்டம் எதுவுமே இருக்க முடியாது. சுதந்திரக் கோரிக்கைக்கு ஒரேயொருமாற்றுத் திட்டம் சுதந்திரத்தை அங்கீகரிப்பதுதான். அதனுல்தான், ''வீரசுதந்திரம் வேண்டி நின்ருர் பின்னர் வேருென்று கொள்வாரோ?'' என்று கேட்டான் பாரதி.

கே: எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் மாற்றுத்திட்டம் இருந்தால் அதைமுன்வையுங்கள் என்று அரசிடம் கேட்கிறுரே-இது தமிழ் ஈழக்கோரிக்கைக்கு முரண்பட்டதாகாதா?

ப: ஆகாது. இதுஅரசுக்கு எதிர்ச்சவால். அரசாங்கம் ஒரு மாற்றுத்திட்டத்தை முன்வைத்து — அது நியாயமானதா என்பதை முதலில் கூட்டணி மாநாடு ஆராய்ந்து பார்த்து, நியாயமானதெனக் கண்டால்— அதன்பின் அத்திட்டத்தை தமிழ் மக்கள் முன்பு சமர்ப்பிக்கும்; இறுதியில் இது சம்பந்தமாக முடிவு எடுக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்கேயுரியது. அவர்கள் அதை ஏற்கலாம் — அல்லது நிராகரிக்கலாம் என்பதே திரு. அமிர்தலிங்கத்தின் கூற்று. என்னைப் பொறுத்தவரை சுதந்திரம் கோரும் தமிழீழ மக்கள் அதற்கு குறைந்த எதையுமே ஏற்பார்கள்என்று நான் நினைக்கவில்லை.

* * *

செல்வி லதா,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

கே: சுயநிர்ணயக் கோரிக்கைக்கும்(Right to self determination) இறைமைக்கும் (Sovereignity) உள்ள வேறுபாடு என்ன?

ப: சுயநிர்ணய உரிமை என்பது ஒரே நாட்டில் வாழும் தேசிய இனங்களுக்குள்ள உரிமையாகவும் கொள்ளக்கூடியது. இறைமை என்பது ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள இறையாண்மை உரிமை. இலங்கை ஒரே நாடன்று; இரு தேசங்கள் அந்நியனுல் பலவந்தமாகவும் செயற்கையாகவும் பிணைக்கப்பட்டுள்ள ஒரு தீவு என்பதே கூட்டணியின் அரசியல் கொள்கை. தமிழ் ஈழத்தின் இறைமை 1972ம் ஆண்டு மே 22ம் திகதியுடன் தமிழ் ஈழ மக்களிடமே மீண்டும் வந்துசேர்ந்துவிட்டது. அந்த இறைமையை எப்படியும் பிரயோகித்து தமிழ் ஈழத்தை மீண்டும் சுதந்திர நாடாக்கவேண்டுமென்பதே கூட்டணியின் நிலைப்பாடு.

கே: சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில்கலந்துகொண்டு வவுனியா பா.உ. திரு. தா. சிவசிதம்பரம் நியூசிலாந்தில் நிகழ்த்திய உரைகள் எப்படியிருந்தன?

ப: மிகவும் அருமையாக இருந்தன. ஆயினும் ஒரேயொரு குறை. அது நம்மவர்கள் அனேகர் திரும்பத் திரும்ப விடும்பிழைதான்; அதாவது, ஒரு தனி நாட்டினமாக தமிழ்த் தேசிய இனமாகவாழும் தமிழ் மக்களை, இலங்கையின் சிறுபான்மை இனம் என்று திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டிருக்கக் கூடாது. சிறுபான்மை பெரும்பான்மை என்ற கதையை எடுத்தால், இலங்கை ஒரேநாடு என்ற பழைய தவருன சித்தாந்தத்துக்குள்ளேயே நாம் வீழ நேரிடும். இனிமேல் நம் தலைவர்கள் யாரும், தமிழ்தேசிய இனப் பிரச்சினையை சிறுபான்மையோர் பிரச்சினை என்று மறந்தும்குறிப்பிடக்கூடாது.

சி. முருகையா,
கொழும்பு.

கே: கூட்டணியை ஒரு காலிப் பெட்டி என்று வர்ணித்திருக்கிருரே இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா?

ப; 1983 பொதுத்தேர்தலின் போது அரசியலிலிருந்து காலியாகப் போகிறவர்கள் இப்படி ஏதாவது புலம்பிக் கொண்டேயிருப்பார்கள் — விட்டுத்தள்ளுங்கள்!

* * *

ப. நாகராஜா,
அக்கரைப்பற்று-9

கே: தமிழர் விடுதலைக்காகப்பாடுபடும்சுதந்திரனை ஒவ்வொருவரும் காசு கொடுத்து வாங்கி வாசிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ப: சுதந்திரனை 'ஓசி'யில் படிக்கும் புண்ணியவான்களுக்கு உங்களுக்குள்ள உணர்ச்சி வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

* * *

எஸ். ஜே. குணரத்தினம்,
கோப்பாய்.

கே: பிரதமரைப்பாராட்டிய த. வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களின் செயலை தாங்கள் வரவேற்கிறீர்களா?

ப: தமிழ்மக்கள், தமிழ்ஈழத்துக்குத் தனியான ஒரு பிரமரை உருவாக்கும் அதிகாரத்தை கூட்டணிப் பா.உ.க்களுக்கு கொடுத்திருக்கிருர்களே தவிர—சிறீலங்காவின் பிரதமரையும் மந்திரிகளையும் பாராட்டுவதற்காக அவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பவில்லை.

* * *

கா. நாராயணசாமி.
தென்மதுரை கீ. பி.
நோர்வூட்.

கே: ஒரு நீதியான அரசின் கடமையென்ன?

ப: குடிதழீக் கோலோச்சுவது!

கே. உண்மை ஒரு நாள் தெரியும்போது, திரு. தேவநாயகம் மீண்டும் கூட்டணியில் சேர்ந்து இனவிடுதலைக்கு உழைப்பாரா?

ப: அந்த நல்ல புத்தி அவருக்கு வரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கே: சாவகச்சேரி நவம், ஐ. நா. சபையின் பொதுச் செயலாளராக வருவாரா?

ப: வருவார்—முதலில் தமிழீழத்தின் பிரதிநிதியாக ஐ. நா. சபையில் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர்.

* * *

கே. கந்தசாமி,
வத்தளை.

கே: நீதி நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும்?

ப: அமெரிக்காவிலுள்ளது போன்று இருக்க வேண்டும். ஈரான், அமெரிக்கர்களை தெஹ்ரானில் பணயக் கைதிகளாக்கியுள்ளதற்குப் பதில் நடவடிக்கையாக, அமெரிக்காவில் வாழும் ஈரானிய மாணவர்களை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றுமாறு அமெரிக்க ஜனுதிபதி ஜிம்மி கார்ட்டரே உத்தரவிட்டார். மேற்படி உத்தரவு அமெரிக்க அரசியலமைப்புக்கு முரண்பட்டதென்று கூறி, ஈரானிய மாணவர்கள் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அமெரிக்க நீதிமன்றம், ஈரானிய மாணவர்களின் மனுவை ஏற்று ஜிம்மிக் கார்ட்டரின் உத்தரவு சட்டவிரோதம் என்று தீர்ப்பு கூறியிருக்கிறது. இப்படித் தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டதென்பதற்காக அமெரிக்காவின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கு ஜிம்மி கார்ட்டர் முயற்சிக்கவில்லை. நீதிபதிகளைப் பயமுறுத்தவும் அவர்முயலவில்லை. ஈரானில் அமெரிக்கர்களுக்கு கொடுமை விளைவிக்கப்படும் சூழ்நிலையிலும், நீதியிலிருந்து வழுவாது தீர்ப்பளித்திருக்கின்றனர், அமெரிக்க நீதிபதிகள். அமெரிக்காவில் நீதி நிர்வாகம் எவ்வளவு தூரம் சுதந்திரமாகவும், பாரபட்சமற்றும் இயங்குகிறதென்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

* * *

செல்வி கீத்தா,
மத்தியஸ் வீதி,
மட்டக்களப்பு.

கே: எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேரும் காலம் நெருங்கி விட்டது என்று திரு. பிரேமதாசா கூறியதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப; எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், அவை இணைந்து ஒரு கட்சியாகிவிடும்; ஒரு கட்சியானுல், இலங்கையில் ஒருகட்சி ஆட்சி தோன்றிவிடும்: ஒரு கட்சி ஆட்சி ஏற்பட்டால்— பாராளுமன்ற ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும். ஆகவே பிரேமதாசா கூறியது நடந்தால், ஜனநாயகம் வேரோடழிக்கப்பட்டுவிடும்.

கே: பழைய தலைமுறையினர் ஏமாந்தது போல் புதிய தலைமுறையினர் சிலரும் ஏமாந்து கொண்டிருக்கிருர்களே!

ப; அவர்கள் ஏமாந்து கொண்டிருக்கிருர்களா? அல்லது ஏமாறுவதுபோல நடிக்கிருர்களா? அல்லது எம்மைஏமாற்றுகிருர்களா?

* * *

சுந்தரம்,
யாழ்ப்பாணம்.

கே; நாடு பிளவுபட்டால் வெளி''ார் தலையீட்டுக்கு இடமேற்படும் என்று கல்வியமைச்சர் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளாரே?

ப: இதற்குப் பாராளுமன்றத்திலேயே கோப்பாய் எம்.பி. அழகாகப் பதில் கூறியிருந்தார், அதாவது, தமிழீழ மக்களின் சுதந்திரக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் சமாதானமாக இணங்காவிட்டால்மட்டுமே வெளிநாட்டுத்தலையீட்டுக்கு இடமுண்டென்றும், இரு தேசிய இனங்களும் ஒன்றின் சுதந்திரத்தை மற்றது அங்கீகரித்து நடந்தால், வெளிநாடுகள் இங்கு தலைநீட்ட முடியாதென்றும் இல்லாவிடின், வெளிநாட்டுத் தலையீட்டின் காரணமாக. சிறீலங்கா, தமிழீழம் ஆகிய இரண்டு நாடுகளையுமே மூன்ருவது ஆள் தான் ஆளுவான் என்றும் திரு. கதிரவேற்பிள்ளை சுட்டிக் காட்டியிருந்தார்.

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

கிறிஸ்மஸ் கவிதை

## ஒளியின் உதயம்

பாவ மெனும் இருளில்
படுத்துறங்கும் மக்கள்...

பூவிழந்த பெண்ணைப்
போல் உலகம்தோன்றும்!

மழை பொழிந்த போதும்
மரஞ் செடிகள் தானும்

அழகு மல ரென்னும்
அணியிழந்து நிற்கும்!

வாழும் உயி ரெல்லாம்
வாடிப்போய்த்தோன்றும்

நீளும் துயர் கண்டு
நில மகளே அழுவாள்!

ஏவாள் அவளாலே
இந்த வினையம்மா!

தூவும் விதையெல்லாம்
தொடரும் நோய்
அல்லோ!

ஆவதினி என்ன?
ஆண்டவனே கேட்பான்!

சாபமிது தீர
சன்மார்க்கம் என்ன?

பரம பிதா தம்மைப்
பார்த்து மகன் சொல்
வான்

'நரகமதை மீட்க
நான் போவேன்' என்றே

சொன்னபடி சுதனும்
சொர்க்கமதை விட்டு

அன்னை மரி வயிற்றில்
அவதாரம் செய்தார்!

— பாண்டிமாதேவி

மார்கழி

சுடர்
CHUDAR

சிறுவர்
சிறப்பிதழாக
வெளிவந்துள்ளது

'நாளைய உலகின்
நாயகர்கள்'
-பொன். பூலோகசிங்கம்
(சிறுவர் கட்டுரை)

'இளையோரே வலியவர்'
—நடமாடி
(சிறுவர் கட்டுரை)

உணர்ச்சிக் கவிஞரின்
ஆக்கங்கள்
—ச. ஸ்ரீ காந்தா
(இலக்கிய திறனுய்வு)

குறுந்தொகை
காதல் ஓவியங்கள்
—கலாமோகன்
(இலக்கிய கவிநயம்)

இரசிகமணியின்
இறுதிக்காலம்
பொன். சண்முகநாதன்
(கட்டுரை)

பயிர்கள் கருகுகின்றன
—காவலூரான்

கவிஞர் குணரத்தினம்
அவர்களின் பேட்டி
— மணி

ஒருபாட்சாலை அதிபரும்..
—வே. தில்லைநாதன்
(இம்மாத பரிசுக்கதை)

சிபார்சுக் கடிதம்
—செ. குணரத்தினம்
(சிறுகதை)

ஆகிய அம்சங்களும், மற்றும் பல சுவையான தகவல்களும் அடங்கிய தேன் சிந்தும் இலக்கிய மலராக சுடர் வெளிவந்துள்ளது.

நீங்கள் கொடுக்கும்
ஒரு ரூபாவுக்கு மேல்
பெறுமதிவாய்ந்தது
சுடர்

தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி
நிர்வாகி
இலோன் நியூஸ் பேப்பர்ஸ்
லிமிட்டட்
194ஏ, பண்டாரநாயக்கவீதி
கொழும்பு-12

# திரைகடலோடித் திரவியம் தேடிடும் தமிழரே! பெற்றதாயை பிறந்த பொன்னுட்டை மறவாதீர்!!

## தமிழீழ வளர்ச்சிக்கு உங்கள் சிந்தனை பயன்படட்டும்!

### சிங்கராயர் அடிகளாரின் கிறிஸ்துமஸ் புதுவருட, பொங்கற் செய்தி

வண. சிங்கராயர் அடிகளார் அ. ம. தி. அவர்கள் கிறிஸ்துமஸ், புதுவருட, பொங்கல் வாழ்த்தாக பின்வரும் செய்தியை அனுப்பிவருகிருர்.

அன்புள்ள நண்பனுக்கு,

வணக்கம். முன்பின் தெரியாத ஒருவனிடமிருந்து ஒரு கடிதம் என்ற சிந்தனை எழலாம். கடல் நம்மைப் பிரித்தாலும் தமிழ் ஈழத்தில் பிறந்தவர் என்ற உரிமையோடு, தமிழையே பேசுபவர்கள் என்ற உறவோடு தொடர்பு கொள்ளுகிறேன்.

கிறீஸ்து பிறப்பை நினைவு கூரும் இந்நாளிலே புது வருடமும் பொங்கல் பண்டிகையும் அண்மிக்கவிருக்கும் இந்நேரத்திலே நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்விழாக்கள் அடிமைப்பட்டிருக்கும் நம் அன்னையை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும். உறுதியுடன் செயற்பட திடசங்கற்பம் பூணும்நாளாகவும் இருக்கவேண்டும் என ஆசிக்கின்றேன்.

நாங்கள் இந்நாட்டில் ஏற்பட்ட இன்னல்களினுல் தமிழ் மாணவன் தரப்படுத்தப்பட்டு வேலை வாய்ப்பில்லாமல் தரைப்படுத்தப்பட்ட கொடுமையின் காரணமாக வெளிநாடு புறப்பட்டீர்கள். ''திரைகடல் ஒடியும் திரவியம் தேடு'' என்ற நம்முன்னேரின் வாக்கிற்கமைய சிரமங்கள் மத்தியில் உழைத்து வருகிறீர்கள். தமிழ் அன்னைக்காகவும் ஒரு பகுதியை அர்ப்பணித்து வருகிறீர்கள் என நம்புகிறேன்,

நீங்கள் எங்கு எப்படி வாழ்ந்தாலும் நீங்கள் பிறந்த பொன்னுட்டை மறக்க மாட்டீர்கள். திரும்பவும் தமிழ் மண்ணுக்கு வருவீர்கள். தாயகம் காக்க வருவீர்கள். வரும்பொழுது எப்படி வருவீர்கள் —இதுதான் இன்றைய கேள்வி.

வரும்பொழுது ஆடம்பரக் கார்களுடனும், தொலைகாட்சிக் கருவிகள். நவீன சாதனங்களுடனும் ஏற்கனவே தாயகம் திரும்பி ''நான் எனது வீடு'' என வாழ்பவர்களைக் காண்கிறோம். அவர்களைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கிறோம்;

நீங்கள் அப்பட்டியலில் சேராமல் நாட்டைவளர்க்க பொருளாதாரத்தை வளர்க்க நம் மத்தியில் வேலையில்லாமல் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்ட நம் வாலிபர்களுக்கு, யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஆக்கப்பணியில் ஈடுபட மாட்டீர்களாஎன ஏங்குகின்றோம். ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.

அழிவிலிருந்து ஆக்கம் பிறக்கும் என்பார்கள். 1977 ஆவணியில் தமிழன் சிந்திய இரத்தத்தால் சில ஆக்கங்கள் பிறந்துள்ளமையை மகிழ்வுடன் கண்ணுேக்குகிறோம். தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்தை வளர்க்க நிறுவனங்கள் தோன்றியுள்ளமையைக் காண்கிறோம். வளர முயற்சிப்பவர்களுக்கு வளர்க்க முயல்பவர்களுக்கு முன்னுள் இலங்கை வங்கித் தலைவர் செ. லோகநாதன் அவர்களது தலைமையின் கீழ் ''கொன்சல்ற்றன்சி அன்ட் பினுன்ஸ் அன்ட் டெவலப்மென்ட்'' என்ற நிறுவனம் அமைக்கப்பட்டுபணியாற்றி வருகிறது,

தமிழ்ஈழத்தின் கனிவளங்கள், ஆரம்பிக்கப்படக் கூடிய கைத்தொழில்கள் பற்றி யாழ்/பல்கலைக்கழக மாணவர்கள் ''மனிதன்'' என்ற பெயரில் குழுவாக அமைந்து ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறுர்கள். இவர்களைப்போல் இன்னும் எத்தனையோ பேர்.

இவர்களது முயற்சிகள் அனைத்தும் கொழும்பில் தான் தொழில் நடத்தலாம் என்ற 'நவநாகரீக' கொழும்புத் தமிழரின் வரட்டுத்தத்துவத்திற்கு முழுக்குப்போடுகின்றன.

எனவே நண்பா! நீங்கள் திரைகடல்ஓடியும் திரவியம் தேடு என்று செல்வத்தைத் தேடிக்கொண்டிருக்கும் தங்களை தமிழ்ஈழ பொருளாதார அபிவிருத்தி பற்றிச் சிந்திக்குமாறு அழைக்கிறோம். வழிகாட்ட எத்தனையோ மக்கள் ஆயத்தமாக இருக்கிறுர்கள். சிந்தனைத் தெளிவுடன் புதிய தொழிற்சாலைகளை நிறுவுங்கள். அதற்கான உபகரணங்களைக் கொண்டு வாருங்கள். அதற்கான பயிற்சியை நீங்கள் வெளிநாட்டிலிருக்கும் பொழுதே பெற்றுக் கொள்ளுங்கள். வழிகாட்ட துணைபுரிய ஆயத்தமாக இருக்கிறோம்.

அறுபது சதுர மைல்களைக் கொண்ட யாழ்குடா நாட்டில் ஆறு இலட்சம் மக்கள் முடங்கிக் கிடப்பதைப் பற்றிச் சிறிது சிந்தியுங்கள். நான்கு பரப்புக்கள் இரண்டு பரப்பாகி, இரண்டு ஒன்றுகி இந்த ஒரு பரப்பிற்குள் வீடு கிணறு மலசலகூடம் ஆகியவற்றுடன் அவதிப்படுகிருர்கள். தண்ணீர் உப்புநீராக மாறுகிறது. மருத்துவமனை செல்வோரில் 35% வருத்தங்கள் இந்த கல்சியம் (உப்பு) கலந்த தண்ணீரினுல் ஏற்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. தண்ணீர் உப்பாகமாறினுல் தண்ணீரைச் சரிப்படுத்தவே முடியாதநிலை. எனவே உங்கள் சிந்தனைகள் குடாநாட்டிற்கு வெளியே செல்லட்டும்,

அழகான கார்களைக் கொண்டுவந்து எரிபொருட் தட்டுப்பாட்டினுல்அவற்றை 'கராஜ்'களில் முடக்கி வையாமல் நாட்டை வளர்க்கக்கூடியதும் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய இயந்திரங்களை, கருவிகளைக்கொண்டு வாருங்கள். கொண்டுவந்து கூட்டுறவு முறையிலோ அல்லது தனியார்நிறுவன அடிப்படையிலோ தொழிற்சாலைகளை அமைத்து எமது தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளியுங்கள். எமது தமிழ் ஈழத்துக்கு பொருளாதார ரீதியினுல் விடுதலையை முதலில் ஏற்படுத்துங்கள். அதுவே நீங்கள் தாயகத்திற்குச் செய்யும் முதற்கடமை;

இம்மடல் தங்களைச் சிந்திக்க வைக்கும் என நம்புகிறேன். தொடர்பு கொண்டால் உதவிசெய்யக் காத்திருக்கிறேன்;

நன்றி வணக்கம்
அன்புடன்
ஆ. சிங்கராயர் அ.ம.தி.
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,

# இனப் பாரபட்சம் தொடர் கதையாகிறது!

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்:—

அரசாங்க இலிகிதர் சேவைக்கு. (General Clerical Service) ஆட்களைத் தெரிவுசெய்வதில் ஏறத்தாழ ஓராயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டதில், இரண்டேயிரண்டு தமிழர்களே தெரிவு செய்யப்பட்டனர், இதைநான் சென்ற ஆண்டு ஜனுதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அதன்பின் நடைபெற்ற தெரிவுகளில் இடம் பெற்ற பாரபட்சங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்;

இலிகிதர் சேவைக்கு 2500 பேர் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களில் ஆக 90பேர்தான் தமிழ் பேசுவோர் அதாவது நூற்றுக்கு நான்கு வீதமானுேரே தமிழ்பேசுவோர் இத்தீவின் மொத்தத் தொகையில் 28 சதவீதமாக இருக்கும் தமிழருக்கு—ஆக 4 சதவீதமே ஒதுக்கப்பட்டுள்ளதென்ருல் இது நீதியானதா?

தட்டெழுத்தாளர் 100 பேரைத் தெரிவு செய்ததிலே 5 பேர் மாத்திரம் தமிழர். இது ஆக 5 சதவீதமே:

சென்ற ஆண்டு நிர்வாகசேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 114 பேரில் தமிழ் மொழி மூலம் ஒருவர் கூடத் தெரிவு செய்யப்படவில்லை, இதை ஜனுதிபதிக்கு சுட்டிக்காட்டியிருந்தேன்,

இலங்கை நிர்வாகசேவைக்கு (C. A. S. Open Competitive Examination) 350 தமிழர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து ஆகமூன்று தமிழ் இளைஞர்கள்தான் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்;

வரையறுக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சைக்கு 250 பேரை அழைத்ததிலே ஆக 15பேர்தான் தமிழ் ஊத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கு நூறு தமிழ் மக்கள் வாழுகின்ற கழுவாஞ்சிக்குடிக்கு உதவி அரசாங்க அதிபராக சிங்களவர் ஒருவர் அனுப்பப்பட்டிருக்கிருர்.

பேர்சி சமரவீரா;— இலங்கை நிர்வாக சேவைதிறந்த போட்டிப் பரீட்சைக்கு 3853 சிங்கள உத்தியோகத்தர்களும் 228 தமிழ் உத்தியோகத்தர்களும் 21 முஸ்லிம் உத்தியோகத்தர்களும் எழுதினுர்கள். இவர்களிலே 322 சிங்களவர்களும் 3 தமிழர்களும் ஒரு முஸ்லிமும் தகுதி பெற்றுர்கள்.

அமிர்;— நான் குறிப்பிட்டது மொத்தத் தொகையான 350 பேரில் மூன்று தமிழர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர் என்பதுதான் நான் சொன்னதையே நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள்; 'நான் கூறிய மொத்தத் தொகைமட்டுமே தவருனது.

பேர்சி சமரவீரா:— சித்தியடைந்த 3 தமிழர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அதே போல வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு2518 சிங்கள உத்தியோகத்தர்களும் 208 தமிழ் உத்தியோகத்தர்களும் ஆங்கில மொழி மூலம் 271 பேரும் எழுதினர். இச்சோதனையில். 225 சிங்களவர்களும் 10 தமிழரும்ஆங்கில மூலத்தில் 13 பேரும் எழுதியுள்ளனர். அவர்கள் அனைவரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர்,

ஓர் உறுப்பினர்:— முஸ்லிம் ஒருவரும் இல்லையா?

பேர்சி:— இப்பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் தகுதி பெற்றவர்களில் சில முஸ்லிம்களும் இருக்கக் கூடும்.

அமிர்:— உண்மையில் நான்தான் தொகையைக் கூட்டிவிட்டேன்; நான் 15 தமிழர் என்றேன், பிரதியமைச்சரோ ஆக 10 தமிழர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டதாகக் கூறுகிருர்.

—பாராளுமன்றம் (1-12-79)

# தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சில ஆலோசனைகள்

ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தன அவர்கள் ஐக்கிய் தேசியக்கட்சியின் 25வது மாநாட்டில், ஓர் அரசியற் கட்சி எப்படி இயங்க வேண்டும் என்பதை மிகவும் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவரது கூற்று ஐக்கிய தேசியக்கட்சிக்கு மட்டுமல்ல—எந்த ஒரு கட்சிக்கும் பொருத்தமான அறிவுரையாகும்.

அவர் கூறினர்—

''அடுத்த பொதுத்தேர்தலில் தனிநபரைவிட கட்சிகளுக்கே முக்கிய இடம் கிடைக்கவிருக்கிறது எனவே எமது கட்சியின் மதிப்பை உயர்த்துவதற்கு உயர் மட்டம் முதல் அடி மட்டம் வரையுள்ள சகலதரத் தலைவர்களும் ஊழல் என்ற கறை படியாதவர்களாக இருக்கவேண்டும், அத்தோடு அவர்கள் கட்சி வகுத்திருக்கும் ஒழுக்க நெறிக் கோவையை கடைப்பிடித்து ஒழுகுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

''அரசாங்கத்தில் அமைச்சர்களாகவோ— அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ பதவிவகிக்கும் உறுப்பினர்கள் கட்சிக் கட்டுக்கோப்பை உதாசீனம் செய்யும் போக்குஇப்போது தலையெடுக்கப் பார்க்கிறது; அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. ஒரு கட்சி முன்னேறுவதற்கு நான்கு முக்கியபலம் தேவை.

1. கட்சிக்கட்டுக்கோப்பு எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும்.

2. பரந்த அடிப்படையில் கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஸ்தாபனரீதியாக கட்சி பலப்படுத்தப்பட வேண்டும்.

3. கட்சியின் இளைஞர் அமைப்பு மாதர் அமைப்பு. மற்றும் கட்சிக்கிளைகள் யாவும் சீராக அமைக்கப்பட்டு, அவை சுறுசுறுப்புடனும், கட்டுக்கோப்புடனும் இயங்க வேண்டும்,

4, கட்சிக்கு முறையாக நிதிசேர்க்கப்படவேண்டும், கட்சியானது எப்பொழுதும் கிளர்ச்சிசெய்யும் ஒரு கட்சியாக இருக்க வேண்டும். (AGITATIONAL FORCE)

இவ்வாறு ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தன அவர்கள்கூறியுள்ள அறிவுரை ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாத்திரமன்றி இத்தீவிலுள்ள அனைத்து அரசியற் கட்சிகளுக்குமே பொருந்தும். கட்டுக்கோப்பு உறுப்பினர்கள், ஸ்தாபனபலம் இளைஞர்; மாதர் கிளைகளின் சுறுசுறுப்பான இயக்கம், நிதி—இவை சகல கட்சிகளுக்கும் தேவையானவைதாம்.

ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கட்சிக்குள் தலைகாட்டத் தொடங்கியிருப்பதாக எச்சரித்திருக்கும் கட்சிக்கட்டுப்பாட்டை மீறும் அல்லது உதாசீனம்செய்யும்போக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் இருந்து வருவதை நாம் பலதடவை சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்திருக்கிறோம்.

கடந்த காலங்களில் தமிழரசுக்கட்சியிலிருந்தபோது மட்டக்களப்பு முதல்வர் இராசதுரை, பல தடவைகளில் கட்சியின் உத்தரவுகளையும், கட்டுப்பாட்டையும், உதாசீனம் செய்து தம் மனம் போக்கில் நடந்து கொண்ட நேரத்தில்—அவர் மீது தாமதமின்றி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாளுல், கட்சிக்குள் ஒரு முடத்தெங்கு வளர்ந்திருக்க சந்தர்ப்பமேற்பட்டிருக்காது துரோகத்தனம் தலையெடுத்திருக்க முடியாது.

இதே நிலை இன்றும்கட்சிக்குள் தொடரத்தான் செய்கிறது: தமிழர் விடுதலைக் கூட்டணி கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் மெத்தனமாக இருக்கக் கூடாது. தயவு தாட்சண்யம்காட்டக் கூடாது.

உதாரணமாக ஒன்று— அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புக்களில்கூட்டணிப் பா.உக்கள் எவரும் கலந்து கொள்ளக் கூடாது என்பது கூட்டணி செயற்குழுவின் கட்டளை, இப்போது இக்கட்டளை தமிழர் விடுதலைக்கூட்டணியிலுள்ள உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனுல், நடைமுறையில் கூட்டணியின் சில பாராளுமன்றஉறுப்பினர்கள்அமைச்சர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்களில் பங்கு பற்றினர்கள்— பாராட்டிப் பேசினர்கள்— மாலையிட்டார்கள்— விருந்துண்டார்கள் என்றெல்லாம் பத்திரிகைகளில்செய்திகள் வருகிறபோது, கூட்டணியின் தீர்மானம்என்னவாயிற்று, கட்டுப்பாடு என்னவாயிற்று என்றெல்லாம் பொது மக்கள் மத்தியிலே கேள்விஎழத்தான் செய்யும், இவ்வாறன கட்டுப்பாடு மீறும் செயலுக்கு கூட்டணி துளியும் இடமளிக்கக்கூடாது.

தனி மனிதர்கள் அல்ல— கட்சியே பெரிது என்ற எண்ணத்துடன் கூட்டணி பா, உக்கள் செயற்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு மகோன்னதமான பொறுப்பை — புனிதமான பொறுப்பை — தன் தோள் மீது சுமந்து கொண்டிருக்கிறது. தமிழீழத்தின் சுதந்திரத்தை—தமிழ் மக்களின் விடுதலையை- மீட்டெடுக்கும் பாரிய பொறுப்பை 1977 பொதுத் தேர்தலின்போது கூட்டணி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

''தமிழ்த் தேசிய இனத்தின் கட்டளையைப்பெற்று அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களின் இறை

—5 ம் பக்கம் பார்க்க

# கல்வியமைச்சருக்கு ஒரு வார்த்தை

உண்மையாகத் தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவதுபோலப் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது என்று கூறுவார்கள். அதேபோல தமிழ் தேசிய இனத்தின் தமிழ் ஈழக் கோரிக்கைபற்றி எத்துணை தான் விளக்கமளித்தாலும், எடுத்துக்கூறினுலும் அது ஆதிக்கபுரியினரைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகி வருகிறது.

உண்மையில் தமிழ்ஈழ இலட்சியம் ஒருகோரிக்கை (DEMAND) கூட அன்று. அது தாயகத்தின் இழந்த ஆட்சி உரிமையை மீளப்பெறும், (REGAINING LOST STATE) விடுதலைப் போராட்டமாகும்.

'தமிழ் ஈழம்' என்பது ஒருபோதும் நாட்டுப்பிரிவினையாக முடியாது, 1833ம் ஆண்டுக்கு முன்பிருந்து வந்ததுபோல—இலங்கைத்தீவு இரண்டு நிர்வாக அமைப்புக்களாக மீண்டும் மாற்றியமைக்கப்பட வேண்டும்; தமிழ் மக்கள் தமிழீழத்தில் தம்மைத்தாமே தமது இறைமையைப் பிரயோகித்து வெளியாரின் தலையீடின்றி ஆள வேண்டும் சுதந்திரமாகவும்சமத்துவமாகவும் வாழவேண்டும் என்பதே தமிழீழ இலட்சியத்தின் தத்துவமாகும்.

தமிழீழ விடுதலை இலட்சியம் அணுவளவுகூட சிங்கள மக்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ எதிரானதோ — அல்லது குறுகிய இனவெறியின் அடிப்படையில் எழுந்த ஒரு வரட்டுக் கூச்சலோ அல்லது சிங்கள அரசிடமிருந்து கூடிய அளவு சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காகமுன்வைக்கப்பட்ட ஒரு பேரப்பொருளுமோவல்ல, மாருக வரலாற்று அடிப்படையிலிருந்து பிறிட்டெழுந்த சுதந்திர உணர்வினுல்—நாம் ஒரு தனியான தேசிய இனம் என்ற உயர்ந்த அரசியல் சிந்தனையின் விளைவினுல்— சுயமரியாதையுள்ள எந்த ஒரு இனத்துக்கும் இருக்கக்கூடிய இயல்பான உந்துதலினுல் எழுந்ததே தமிழீழ விடுதலை இலட்சியமாகும்.

தமிழன் யாருக்கும் தாழாமல்—யாரையும் தாழ்த்தாமல் யாரையும் சுரண்டாமல்—யாராலும் சுரண்டப்படாமல் யாருக்கும் எஜமானனுகவும் இராமல்— யாருக்கும் அடிமையாகவும் இராமல்— சமதர்ம சமுதாயமாக வாழ வேண்டும் என்ற மகோன்னதமான சிந்தனையின் பெறுபேருக முகிழ்த்ததே தமிழ்ஈழ விடுதலைத்தீர்மானமாகும்.

இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப்பிறந்தால், அவையிரண்டையும் அறுவைச் சிகிச்சைமூலம் டாக்டர்கள் இரண்டாகப் பிரித்து விடுகிறார்கள்; ஐயையோ ஒன்றுபட்ட சகோதரர்களை இப்படி வெட்டிப் பிரிக்கலாமா என்று யாரும் கேட்கமாட்டார்கள். அவ்வாறு டாக்டர்கள் இரு குழந்தைகளையும் தனித்தனியாக வெட்டிப் பிரித்தால் மட்டும்தான், இரு குழந்தைகளும் ஆரோக்கியமாக வளர்ந்து சகோதரபாசத்துடன் நிலைத்து வாழ முடியும், இதுதான் இயற்கை நியதி.

சிறீலங்காவும் தமிழீழமும் இயல்பாகவே ஒட்டிப் பிறந்த நாடுகள் அல்ல, இரு நாடுகளையும் அடிமைப்படுத்திய அந்நியனுல் செயற்கையாக ஒட்டிவைக்கப்பட்டவையே இவ்விரு நாடுகளும். இந்தச் செயற்கை ஒட்டை அறுவைச் சிகிச்சை மூலம் வெட்டிப்பிரித்தால் மட்டுமே இரு தேசிய இனங்களும் பரஸ்பரம் ஒற்றுமையுடனும், ஆரோக்கியமுடனும்— வாழமுடியும் வளர முடியும் என்பதே கூட்டணியின் கொள்கையாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் வந்திருந்த கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின தமிழீழம்தனிநாடானுல் வெளிநாட்டுத் தலையீட்டுக்கு அது வழிவகுக்கும் என்று கூறியிருக்கிறார்.

கல்வியமைச்சரின் இக்கூற்றை மறுதலிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத்தீவில் தமிழ்த் தேசிய இனத்தின்அபிலாஷையை சுதந்திரஉணர்ச்சியை-தம்மைத்தாமேஆளவேண்டும்என்ற நியாயமான கோரிக்கையை சிங்களமக்களும்அவர்களின் தலைவர்களும் புரிந்துகொண்டு, தமிழ் மக்களின் சுதந்திரத்தை மனிதாபிமானத்துடனும், நட்புறவுடனும் அங்கீகரிப்பார்களானுல்—இரு இனங்களுக்குமிடையே கசப்போ வெறுப்போ, அதிருப்தியோ பகைமையோ

## எண்ணம்

தோன்றுவதற்கு அணுவளவும் இடமில்லை, இரு இனமக்களும் தத்தம் உரிமையையும் சுதந்திரத்தையும் அனுபவித்துக் கொண்டு ஒற்றுமையுடனும் உறவுடனும் வாழ வழியேற்படும். அப்படியான சூழ்நிலையில் வெளிநாட்டுத் தலையீடு என்ற பேச்சுக்கிடமில்லை. அப்படியே வெளிநாட்டுத் தலையீடு ஏற்பட்டாலும் இரு இனங்களும் கைகோர்த்து அதை எதிர்த்து முறியடிக்க முடியும்.

அப்படியின்றி, தமிழ் மக்களின் சுதந்திரக் கோரிக்கையை— நியாயமான அரசியல் அபிலாஷையை ஏற்றுக்கொள்ள சிங்கள மக்களும், தலைவர்களும் தொடர்ந்து பிடிவாதமாக மறுத்துக்கொண்டு, தமது கையாட்களையும் படைபட்டாளங்களையும் வைத்துத் தொடர்ந்து ஆட்சிபுரியலாம் என்று கருதுவார்களானுல் — இரு இனங்களுக்கிடையே தீராத அதிருப்தியும் மோதலும் முரண்பாடுகளும். பகைமையும் வளர்வதற்கு அதுபசளையாகிவிடும். இந்த நிலைமை ஏற்பட இடமளித்தால்— தமிழ் மக்கள் விரக்தியின் இறுதிக்கட்டத்துக்கு தள்ளப்படுவார்களானுல்— அம்மாதிரியான சூழ்நிலையில் மட்டுமே வெளிநாட்டுத்தலையீட்டுக்கு இடமேற்படக்கூடும் என்றுஅஞ்சுவதற்குகாரணம் உண்டு.

இருதேசிய இனங்களும், ஒருவரின் சுதந்திரத்தையும் அபிலாஷைகளையும், உரிமைகளையும் மற்றவர்கௌரவித்து மதித்துநடந்தால், இலங்கைத்தீவுக்குள் வெளிநாட்டுத் தலையீடு ஏற்பட அறவே இடமில்லை, என்பதை கனம் கல்வியமைச்சருக்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

# தனிநாடு கோரிக்கையை கைவிடுமாறு ஜனாதிபதி கூட்டணியை கேட்டாராம்!

# ஜே.ஆர்-கூட்டணி சமரசம் உருவாகிறதாம்!

## 'இண்டிபெண்டன்ற்' இதழின் அபிலாஷை

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் கடந்த வாரம் மீண்டும் ஆரம்பமாகியிருப்பதாக "இண்டிப்பெண்டன்ற்" இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையின்போது தனிநாடு கோரிக்கையை கைவிடுமாறு கூட்டணியிடம் ஜனாதிபதி வலியுறுத்தியதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.12.79 'இண்டிப் பென்டன்ற்' தலைப்புச்செய்தியில் மேலும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

இப்பேச்சு வார்த்தையின் போது அரசாங்கத்தரப்பில் ஜனாதிபதி மட்டுமே கலந்து கொண்டார். கூட்டணி சார்பில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், ஆர்.சம்பந்தன், பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபை, அதிகாரப்பரவல், அவசரகாலச்சட்டம், பாரபட்சங்களை அகற்றுதல் சம்பந்தமாக இப்பேச்சுவார்த்தைகள் அமைந்திருந்தன.

இனமோதல்களுக்கு காரணமாக அமைந்துள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி உறுதி கொண்டுள்ளதாகவும்அதன் முடிவைத் தாம் எதிர்நோக்கியிருப்பதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரச்சினைகளை நடைமுறை சாத்தியமான கண்ணேட்டத்துடன் நோக்குமாறு ஜனதிபதி தமிழர் விடுதலைக் கூட்டணியினரைக் கேட்டுக்கொண்டார். தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டுமென்பதே இதன் பொருள் என்று கருதப்படுகிறது.

"அரசாங்கம் தனது 'பிரதேச சுயாட்சி' வாக்குறுதியை நிறைவேற்றினல், ஈழக்கோரிக்கை தானகவே செத்தொழிந்துவிடும்" என்று அப்பேச்சாளர் மேலும் கூறினர்.

அபிவிருத்திசபை குறித்து பிரதமர் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதில் அரசுக்குள்ள உறுதியை எடுத்துக் காட்டுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நம்புகின்றனர். இத்துடன் ஜனதிபதியின் உறுதியும் கூட்டணிக்கு புதிய நம்பிக்கையை கொடுத்துள்ளதாக மேற்படி பிரமுகர் தெரிவித்தார்."

இவ்வாறு 'இண்டிப் பென்டன்ற்' செய்தி கூறுகிறது. ஆனல் குறிப்பிட்ட கூட்டணிப் பேச்சாளரின் பெயரை மட்டும் இப்பத்திரிகை வெளியிடவில்லை.

குறிப்பு: கூட்டணித் தலைவர்கள் அனைவரும் தற்சமயம் கொழும்பிலிருப்பதால், மேற்படி செய்தியின் உண்மை பொய் குறித்து தலைவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அறியமுடியவில்லைஎன்பதை சுதந்திரன் வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். —ஆர்.

## ஜூரர்களின்றி

### 'அவ்ரோ' வழக்கு விசாரணை!

சிறீலங்காவின் அரசியலமைப்பு அமுலுக்கு வந்த நாளான 7.9.1978ல் இலங்கை அரசுக்குச்சொந்தமான 'அவ்ரோ' விமானத்தைச் சேதப்படுத்தியதாக புன்னலைக் கட்டுவனைச் சேர்ந்த குலசேகர இராஜசிங்கத்துக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு ஜூரர்களற்ற நீதிமன்றத்திலேயே 11.2.1980இல் விசாரிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஒ.எஸ். எம். செனிவிரத்தின 17.12 79ல் அறிவித்துள்ளார்,

இந்த வழக்கு ஜூரர்கள் முன்னிலையில் விசாரிக்கப்படும் என்று கடந்த தவணையில் தாம் தவறுதலாக தெரிவித்துவிட்டதாகவும் ஆனல் உண்மையில் இந்த வழக்கு ஜூரர்களின்றியே நடைபெறும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

கடந்த தவணையின்போது தாம் தமிழ் பேசும் யூரர்கள் முன்னிலையிலேயே விசாரிக்கப்பட வேண்டும் என்று எதிரிசார்பில் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே. இவ்வழக்கில் எதிரிசார்பில் சட்டத்தரணிகள் ஆர். பாலேந்திரா, ஜி. குமாரலிங்கம் எஸ். நவரத்தினம் (கரிகாலன்) ஆகியோர் ஆஜராகினர்.

—4-ம் பக்கத் தொடர்

மையை உறுதிபண்ணி தமிழீழ விடுதலையை நிலைநாட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாகவே" சென்ற பொதுத் தேர்தலை தமிழர் விடுதலைக்கூட்டணி கருதியது.

சமாதான வழிகள் மூலமோ,நேரடிப் போராட்டங்கள் மூலமோ, இயக்க மூலமோ, தமிழ் ஈழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதே கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியாகும்.

எனவே ஜனதிபதி குறிப்பிட்டதுபோல — அடுத்த பொதுத் தேர்தலின்போது, மக்கள் கட்சிக்கும் அதன் கொள்கைக்கும் அதன் கடந்த கால நடவடிக்கைகளை மனதில் எடைபோட்டுப் பார்த்தே வாக்களிக்கப் போகிறார்கள் — தனிமனிதரின் வீரப்பிரதாபத்துக்கு இனி இடமில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது இலட்சியத்தை சென்றடைவதில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்ற கணக்கை அடுத்த பொதுத் தேர்தலின்போது தமிழ் மக்களுக்கு காட்ட வேண்டியிருக்கும்.

ஆகவே கூட்டணி ஏற்றுக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலை இலட்சியத்தை நோக்கி விரைவாகப் பயணம் செய்வதற்கு — கட்சிக் கட்டுக்கோப்பு, உறுப்பினர் பலம், ஸ்தாபனபலம், இளைஞர்,மகளிர் அமைப்புக்கள், நிதி, போன்றவை மேலும் பெருக வேண்டும். கட்சியின் நிர்வாக இயந்திரம் ஒழுங்காக முடுக்கி விடப்பட்டு, 24 மணிநேரமும் சீராக இயங்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை ஒரு முழுமையான விடுதலை இயக்கமாக மாற்றுகிறவரை — அது ஒருபுறம் விடுதலை இயக்கமாகவும், மறுபுறம் அரசியல் கட்சியாகவும் இயங்க வேண்டிய நிலையில் இன்று இருக்கிறது. இதனுல் பல முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமுண்டு.

எனவே தமிழர் விடுதலைக் ........ கூட்டணிக்குள். விடுதலை ........ இயக்கம் தனியாக இயங்க ........ வேண்டும். வேறு எந்த வித ........ சபலமும், சலனமுமின்றி, ........ விடுதலையொன்றையே ........ குறிக்கோளாகக் கொண்டு ........ முழுநேரமாக இயங்கக் கூடி ........ யவர்கள்.சிந்தனையாளர்கள், ........ விடுதலைக்காகத்திட்டமிட்டு ........ உழைக்கவேண்டும், இம் ........ மாதிரி விடுதலை இயக்கத்தி ........ லீடுபட்டிருப்போர் யார் ........ யார் என்பது வெளியே ........ தெரிய வேண்டியதில்லை.

பல வேலைகளில் மூழ்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடம்,கட்சி அமைப்புப் பொறுப்பையும் சுமத்தாது, அமைப்புப் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து பிரித்து எடுத்து கட்சியின் வேறு பொறுப்புவாய்ந்தவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் ஸ்தாபன பலத்தைப் பெருக்க முடியும்.

அதுமட்டுமன்றி —தமிழர் விடுதலைக் கூட்டணி ஆண்டுக்கொருமுறையோ-இரண்டாண்டுக்கொருமுறையோ- கட்சியின் தேசிய மகாநாட்டை நடத்தினுல் மட்டும் போதாது; தமிழீழத்தின் சகல தொகுதிகளிலும் கூட்டணியின் தொகுதிக் கிளைகளின் மாநாடுகள் நடத்தப்பட வேண்டும்; இதைவிட, தமிழீழத்தில் உள்ள ஏழு மாவட்டங்களிலும் ஏழு மாவட்ட மாநாடு நடத்த வேண்டும். தொகுதி மாநாடுகள், மாவட்ட மாநாடுகள் நடந்து முடிந்த பின்னரே கட்சியின் தேசிய மாநாடு நடைபெற வேண்டும். இதன் மூலம், மக்களிடம் மேலும் நெருக்கமான தொடர்பேற்படவும், இயக்கம் பலப்படவும், நிதி திரட்டவும் முடியும்.

இவற்றையெல்லாம் கூட்டணியின்பொறுப்பில் இருப்பவர்கள் சிந்தித்துப்பார்ப்பார்களாக. —கோவை

## தமிழீழக் கோரிக்கையை

### கூட்டணி பின்தள்ளிவிட்டதாம்!

'இண்டிப்பெண்டன்ற்' குருட்டு விமர்சனம்

பாராளுமன்ற விவாதங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணியே இன்றும் உயர்ந்த தூரத்தைக் கடைப்பிடித்து வருகிறது; சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் அங்கு இருந்தாலும் தமது முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியும் இன, பிரதேசப்பிரச்சினைகளைப் பற்றியே பேசுவதால் அரசாங்கத்துக்குப் பாராளுமன்றம் ஒரு வழிப்பாதையாகவேயிருக்கிறது.

ஆயினும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றத்திலும் வெளியிலும், அமைதிப் போக்கையே கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கும் அரசுக்கும் இடையே நெருங்கிய தோழமை இருந்து வருகிறது. அரசாங்கத்தின் அலைவரிசைக் கேற்பவேஅவர்களும் படிப்படியாக பாடலிசைத்துவருகிறார்கள்போலத் தெரிகிறது,

வடக்குவரை- அரசியல்வாதிகள் இப்போது 'யுத்த நிறுத்த' மனப்பான்மையில் உள்ளனர், உணர்ச்சிகரமான பேச்சுக்கள் நிகழ்த்தப்படுவதில்லை, தமிழீழக் கோரிக்கை அடித்தட்டுக்குள் வைக்கப்பட்டு விட்டது,

அதிகாரப்பரவல் சம்பந்தமான ஜனதிபதி ஆணைக்குழு தனது வேலைகளை செய்துவருகிறது. இதன் பெறுபேருக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதேச சுயாட்சியை நம்பிக்கையோடு எதிர்பார்த்து இருக்கிறது, அவ்வாறு ஆணைக்குழு தீர்மானித்து அதை அரசும் அங்கீகரித்தால், இன அமைதி ஏற்படும்.

—இவ்வாறு யானைபார்த்த குருடர்கள் அதை விமர்சித்ததுபோல தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளது 'இண்டிப்பெண்டன்ற்' பத்திரிகை, (14.12,79)

## கண்டியரும்

## தனிநாடு கோருகின்றனர்!

"கண்டியர்களும் கண்டிராஜ்யம் கேட்கிறார்கள்; அவ்வாறு தனிநாடு அமைப்பதற்கான வாய்ப்பு உண்டென்றும் சொல்கிறார்கள். இதனை என்னிடம் சொன்னவர்களிடம் கண்டிராஜ்யம் அமைப்பதானல்; தொண்டமானை என்ன செய்வது என்று கேட்டேன். அவர் போய் விடட்டும் என்றார்"

—கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின (வீரகேசரி 18.12.79)

குறிப்பு; அந்நிய ஆட்சி இலங்கைத்தீவைக் கைப்பற்றுவதற்கு முன்,கோட்டைராச்சியம், கண்டிராச்சியம், தமிழீழராச்சியம் (யாழ்ப்பாணராச்சியம்) என் மூன்றுஇராச்சியங்கள்இருந்ததும்,பழையகோட்டை இராஜதானிக்கு 1982 முதல் பாராளுமன்றம் செல்லவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைதியின் பொருள் இணக்கமா

## மிதவாதப்போக்குக்கு அபிவிருத்திச்சபையேகாரணமாம் 'வீக்எண்ட்' இதழின் புதிய சரடு!

இலங்கையில்இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது; சமாதானமும் அமைதியும் நிலவுகிறது, தமிழ் ஈழக்கோரிக்கை கைவிடப்பட்டு விட்டது; அரசுடன் கூட்டணி ஒத்துழைக்கப் போகிறது; என்றெல்லாம் எழுதி, வெளிநாடுகளில்—குறிப்பாக வெளிநாடுகளில் இயங்கி வரும் தமிழ்ஈழ விடுதலை இயக்கங்களுக்குமத்தியிலும், தீவிரகொள்கைவாதிகள் மத்தியிலும், ஒருவிதமனக் குழப்பத்தையும் சோர்வையும் ஏற்படுத்தவும்—வெளிநாடுகளில்ஈழ விடுதலைக்கு ஆதரவு அளிப்போரைத் திசை திருப்பவும் அரசாங்க சார்பு ஏடுகள்படாத பாடுபட்டு வருகின்றன. தமிழ் ஈழத்தைக் கைவிடுவதற்கும், அரசுடன் சேருவதற்கும் கூட்டணி ஆலோசித்து வருவதாக 'தினபதி' அண்மையில் கதைகட்டியிருந்தது. அதன் சகோதர ஏடான 'வீக்எண்ட்' எழுதிய அதே போன்ற ஆங்கில கட்டுரையின் சாரத்தை தமிழில் இங்கு தருகிறோம்— தமிழ்மக்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் எச்சரிப்பதற்காக.

—ஆர்

வடபகுதியில் பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் அனுப்பப்பட்ட இராணுவம், ஜனாதிபதியின் கட்டளைக்கிணங்க பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதில் வெற்றிபெற்றுவிட்டது.

ஜனாதிபதியின் கட்டளையைத் தொடர்ந்து அவசர காலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளுடன் இராணுவம் வடக்கில் நுழைந்தது. உண்மையில், ஆயுதப் படைகளுக்கு வடக்கில் நடந்த பயங்கரவாதத்தை அடக்குவதற்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் வழங்கப்பட்டது;

அரசியல் அரங்கில் இந்த நடவடிக்கைகளினால்... ஈரானில் இன்று அயத்துல்லா கொமெய்னியையும் ஈரானிய வெளிநாட்டமைச்சரையும் ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் மாணவர்களைப்போல— தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் எந்தப் பாதையிற் செல்ல வேண்டும்என்று, கட்டளையிட்டுக் கொண்டிருந்த சக்திகளிடமிருந்து கூட்டணித்தலைமைப்பீடம் இன்று காப்பாற்றப்பட்டுவிட்டது.

பனைமரங்கள் நிறைந்த வடபகுதியிலிருந்து இப்போது வீசும் அரசியற் காற்றின்காரணமாக இன்று அரசியல் தட்பவெப்ப நிலை பெரிய மாற்றமடைந்துவிட்டது;

தனிநாடுகோரிக்கைக்காக நிகழ்த்தப்பட்ட ஆவேச உரைகளும், கூச்சலும் தற்போதைக்காகவேனும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன இது ஒருசூழ்ச்சி நிறைந்த தீர்மானமே என்று சிலர் கூறுகின்றனர், ஆயினும் தூண்டிவிடும் குறுகிய பேச்சுக்களை நிகழ்த்துவதை விட தாம்பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதே நல்லதென்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி உணர்ந்துவிட்டது,

'பாராளுமன்றத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பிரதமர் பிரேமதாசாவுக்குப்புகழ்மாலைசூட்டியதுடன் தனிநாடுகோரும் அரசியல் இயக்கமாக வன்றி பாராளுமன்றத்தில்சரியான எதிர்க்கட்சியாக இயங்கியுள்ளனர்.

பாராளுமன்றத்துக்கு வெளியிலும்தேசியஇணைப்பு உணர்வு காணப்படுகிறது.

தமிழர்விடுதலைக்கூட்டணி (இப்போதுஇப்பெயர் தவறானது) ஒபெக் நாடுகளுக்கு சிறீலங்கா மக்களும் அரசாங்கமும் சேர்ந்து அனுப்பும் எண்ணெய் மனுவில் கையெழுத்திடுவதில் அரசுடன் ஒத்துழைத்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய அரசியல்கட்சிகளும் இது அரசியல் விளையாட்டென்று கூறிக்கையெழுத்திட மறுத்துவிட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எண்ணெய் விலையேற்றம் கட்சி அரசியல் கடந்த பொருளாதாரப் பிரச்சினையாகக் காட்சியளித்தது.

அரசாங்கமும் மகாவலியை வடக்கே திருப்பஇணங்கியுள்ளது. இச்செயல் அமிர்தலிங்கத்தின் உள்ளத்தை மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும்.

தனித்தமிழ் ஈழ நாட்டுக்குள்ள ஒரு முக்கிய தடை மகாவலித்தண்ணீர்வடக்கே போவதால் தீர்ந்துவிடும் என்று ஆனையிறவுக்கு தெற்கேயுள்ள வகுப்புவாதிகள் கருதக்கூடும். ஆனால் இக் கருத்து அலட்சியப்படுத்தக்கூடியது என்று அரசாங்கம் கருதுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மிதவாதப் போக்குக்கு காரணம் இதுதான். ஜனாதிபதி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நாடு முழுவதிலும் நிறுவத் துரித நடவடிக்கையெடுத்துவருகிறார்.

"நாட்டின் அபிவிருத்தித்துறை நடவடிக்கைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவிரைவில் எங்களுடன் அரசாங்கத்துடன் சேர்ந்துவிடும்" என்று பிரதமர்திரு. பிரேமதாசா பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின்போது குறிப்பிட்டிருந்தார். தமிழர் விடுதலைக்கூட்டணி அரசுடன் சேருவது பற்றிமட்டுமன்றி ஏனைய எதிர்க்கட்சிகளும் அவற்றினுடைய அரசியல் பலத்துக்கேற்ற முறையில் அபிவிருத்திச்சபைகளில் பிரதிநிதித்துவம் வகிக்கும் என்றும் கூறியுள்ளார்.

வடக்கில் பயங்கரவாதத்தைப் துடைத்தெறிவதற்கு பிரிகேடியர் வீரதுங்காவுக்கு ஜனாதிபதி கொடுத்த காலக்கெடு டிசெம்பர் 31ம் திகதியுடன்முடிய, தொடர்ந்து அடுத்தாண்டுத்தொடக்கத்தில் 'மாவட்ட அபிவிருத்திச்சபை மசோதா பாராளுமன்றத்தில் வரவிருக்கிறது.

ஜனாதிபதி இரண்டுஆண்டுகளுக்கு முன்புநீட்டியநேசக்கரத்தை ஓரளவுக்காவது தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போது பற்றிக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. அதுமட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையையும் ஜனாதிபதியையும்நெருக்கமாக்கியுள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளே அடுத்தஆண்டு, மந்திரி சபைமாற்றத்தையும் விட முக்கியமானது.

இவ்வாறு எழுதிய வீக்எண்ட் (9.12.79) திரு.அமிர்தலிங்கமும் ஜே. ஆர் ஜெயவர்த்தனவும் அருகருகே புன்முறுவலுடன் அமர்ந்திருக்கும் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளது.

# பாராட்டுரைகள் அவசியம்தானா?




ஆசிரியர்
சுதந்திரன்
யாழ் நகர்

அன்பின் ஐயா,

சுதந்திரன் வாசகர்கட்கு அறிமுகமான கோயம்புத்தூர் பரிமளாமணாளன் அவர்களுடன் யான் கடிதத் தொடர்புகொண்டுள்ளவன் அவர் தனது சமீபத்திய கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:...

"இன்றைய தினமணியில் ஓர் செய்தி வெளியாகியுள்ளது. த.வி.கூ. பா.உ. திரு. நவரத்தினம் பிரேமதாசாவை பெரிதும் பாராட்டியுள்ளதாகவும் அதன்படி அவர் அரசில் இணையலாம் எனவும் அச்செய்தி கூறுகின்றது"

இங்கு திரு, நவரத்தினம் அவர்கள் தூய்மையான எண்ணத்துடன் சிவில் நிர்வாக நடவடிக்கைகளைபாராட்டியிருக்கலாம், அப்படித்தான் அவரும் கூறியுள்ளார் ஆனாலும் இப்படியான பாராட்டுகள் எப்படியாக உலகளவில் எதிரொலிக்கின்றன யாருக்கு உபயோகமாகின்றன என்பதை எண்ணிப் பார்க்க மறந்தது ஏனோ?

பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்விருந்துகளும் சில பல உடனடி நன்மைகளுக்காக இருந்தாலும் மொத்தத்தில் கூட்டிக் கழித்துப் பார்க்கையில் நன்மையை விட தீமைகளையே தருகின்றன, அதேவேளையில்பழைய 62 தமிழ் அரசு ஊழியர் விவகாரத்தில் அரசைபாராட்ட மறுத்துவிட்ட திருமலை நகரசபையினரை இங்குசுட்டிக்காட்டாது விட முடியவில்லை.

பூரண சுதந்திர அரசியல் அடிப்படை— அரசியலமைப்பு—கொண்டஓர் சராசரிநாடாளுமன்றஜனநாயக நாட்டில் எதிரணியினரால் அரசினருக்கு பாராட்டுகள் வழங்கப்படுவது சகஜம் ஆயின் இலங்கையில் அரசியல் ஒடுக்கும் — ஒடுக்கப்படும் இன அடிப்படையில் அல்லவா நடைபெறுகின்றது? நம் பா, உ.க்களுக்கு இவைகளை நாமாநினைவூட்ட வேண்டும்?

—ராஜன்பாபு

ஹவ்லக்ரேட்
கொழும்பு-6

அன்பு ஆசிரியருக்கு

சில தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உறுப்பினர்கள் பிரதமரை கனவான்என்றும் உன்னத புருஷர் என்றும் பாராட்டினார்கள். சாவகச்சேரி உறுப்பினர் நவரட்ணம் தொடக்கி வைத்த பல்லவியை தொடர்ந்து யாழ் பா.உறுப்பினர் யோகேஸ்வரன் முல்லைத்தீவு பா,உ எக்ஸ். எம். செல்லத்தம்பு மன்னார். பா, உ சூசைதாசன் ஆகியோர் பிரதமரைதலைமேல்வைத்து புகழ்கிறார்கள். இதன் காரணம் என்ன?

போன அரசாங்கத்தில் திரு. செ, இராசதுரைகல்வி அமைச்சராக இருந்த பதியுதீனைப்புகழ்ந்துசபாஷ் வாங்கினார் எனக் கண்டித்சோம் அப்படிப்பட்ட நாம் பிரதமரைப் புகழுவதா?

நகரசபைத் தேர்தல் காலங்களில் யாழ் வர்துபிரசாரம் செய்த சூசைதாசன் அன்று இப்படி சொன்னார்; பிரதமர் பிரேமதாசா சில தினங்களுக்கு முன் பெரிய வலையோடு மன்னார்வந்தார். ஆனால் அதில் சிறிய சிறிய மீன்கள்மாத்திரமே பிடிபடும் என்னைப்போலபெரிய மீன்கள் பிடிபடாது எனக்கூறி எம்மைப்போன்ற இளைஞர்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணிய சூசைதாசன் பாராளுமன்றத்தில் பிரதமரை பாராட்டிப் பேசியது, எமக்கு மிகவும் மனவருத்தத்தை உண்டுபண்ணியது,

திரு. நவரட்ணம் கூறிய கதையும்மிகவும்கலக்கத்தை உண்டுபண்ணியது. என்னவென்றால் ஏதோ ஒபெக் நாடுகளில் இருந்து எண்ணெய் பெறுவதற்காக கையொப்பம்போட மறுத்து பின் பிரதமரின் புன்னகையில் மயங்கி கையொப்பமிட்டோம் எனவும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு ஒன்றைத் தெளிவாக கூறிவைக்க விரும்புகிறேன், ஏனென்றால் நீங்கள் யாவரும் (த.வி.கூ.) தமிழ் மக்களின் ஆதரவை பெற்று பாராளுமன்றம் சென்றது யாரையும் பாராட்டவோ அல்லது புன்னகையில்மயங்கவோஇல்லை. நீங்கள் பாராளுமன்றம் சென்றது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவே. இதைமறந்து விடாதீர்கள்.

—எஸ். சந்திரன்

128/ 7 செட்டி தோட்டம்,
முள்கம்பளை, கண்டி

# வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் காணிகளைப் பதிவதில் இப்போதைய முறை மாற்றப்படமாட்டாது!

## மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினரின் கோரிக்கையை பிரதியமைச்சர் நிராகரித்தார்

ஜனாப், எம், எல். அஹமட் பரீத்: (மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர்: யூ. என்.பி.) பேசுகையில் கூறியதாவது:

முஸ்லிம் சமுதாயத்தினர் எதிர் நோக்கும் சில பிரச்சினைகளை இங்கு முன்வைக்க விரும்புகிறேன், கௌரவ அமைச்சர் (மொன்ரேகு ஜெயவிக்கிரமா) இன்று காலையில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரை வகுப்புவாதியென்று குற்றம்சுமத்தியது போல, என்மீதும் குற்றம் சுமத்தமாட்டாரென்று நினைக்கிறேன்.

நீங்கள் எப்படி உங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டீர்களோ—அதேபோல நாமும் நமது மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறோம். நீங்கள் உங்கள் மக்களின் கருத்துக்களை எதிரொலிப்பது போலவே நாமும் எமது மக்களின் கருத்துக்களை வெளியிடுகிறோம். இச்சபையில் எமது மக்களின் கருத்துக்களை நாம் வைக்காவிடின் எமதுகடமையிலிருந்து நாம் வழுவிவிடுவோம்.

இனவாதம் வெவ்வேறு மட்டத்தில் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு வடிவங்களில் எமது நாட்டில் இருந்துகொண்டுதான் வருகிறது. இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஓர் உண்மை. எமது நாடு, பல இனங்கள் வாழும் ஒரு நாடாக இருப்பதனால் இனவாதம் இருந்துகொண்டேயிருக்கும். ஆனால் இந்த இனவாதம் இனவெறியாக வெடிப்பதற்கு இடமில்லாமல் நாம்பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே முஸ்லிம் சமுதாயம் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளை நான் இங்கு எடுத்துக்கூறும்போது என்னைத்தப்பாக விளங்கிக் கொள்ளக்கூடாது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு வெளியில் வாழும் தமிழர்களும், முஸ்லிம்களும் தாங்கள் வாங்கும் காணிகளின் அல்லது சொத்தின் உறுதிகளைப் பதிவு செய்வதிலே பெரும் தொல்லைகளுக்கு ஆளாகி வருகிறார்கள். உதாரணமாக, கண்டியில்வாழும் ஒரு முஸ்லிம், ஒரு காணியை வாங்கினால், அவர் அந்த உறுதியைப் பதிவு செய்வதற்கு பெரும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் அவரது பிறப்புச் சாட்சிப் பத்திரம், அவரது தந்தையின் பிறப்புச்சான்றிதழ், அவரது பேரனின் பிறப்புச் சான்றிதழ், பூட்டனின் பிறப்புச் சான்றிதழ் அனைத்தும் கேட்கப்படுகின்றன. இவையனைத்தையும் அவர் காட்ட வேண்டும்.

தலைவர்: மட்டக்களப்பு பகுதியில் எதுவித கஷ்டமும் இல்லையா?

அஹமத் பரீத்: அதனால்தான் மட்டக்களப்புக்கு வெளியே வாழும் சிறுபான்மையினர் என்று குறிப்பிட்டேன். இந்த நாட்டில் எல்லாப் பிரஜைகளுக்கும் சமத்துவமிருப்பதாகக் கூறும் நாம் இந்தச் சங்கடத்தை அகற்ற வேண்டும்.

எம். சிவசிதம்பரம்; மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினரைத் தொடர்ந்து நான் பேசுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் எமது மக்களின் நலன் கருதி நாம் பேச ஆரம்பிக்கும் போது, ஒவ்வொரு தடவையும் எமக்கே வகுப்புவாதிகள் என்ற பட்டம் கிடைப்பது வழக்கம். மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர், மிகவும் சரியாக தனது மக்களின் சட்டபூர்வமான குறைகளையிட்டு இச்சபையில் எதிரொலித்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அரசாங்கத்தின் பொறுப்பு இவற்றையெல்லாம் வகுப்புவாதம் என்று அலட்சியப்படுத்தாது நாம் கூறுவதிலே பொருள் இருக்கிறதா என்று ஆராயவேண்டும். இந்தப் பிரச்சினையை அப்படித்தான் அணுகவேண்டும். அப்படிச் செய்வதன் மூலம்தான் நீங்கள் நல்லெண்ணத்தை உருவாக்க முடியும். அதைவிட்டுவிட்டு வகுப்புவாதிகள் என்று எம்மை அழைப்பதால் பிரச்சினை தீர்ந்துவிடமாட்டாது.

மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை—வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது உறுதிகளைப்பதிவு செய்யும் பிரச்சினை — முஸ்லிம்களையும், தமிழரையும் வெகுவாகப் பாதிக்கிறது. வடக்கு. கிழக்குக்கு வெளியே, ஒரு தமிழரோ முஸ்லிமோ காணியொன்றை வாங்கினால் அதைப்பதிவு செய்வதில் பெரும் கஷ்டமடைய நேரிடுகிறது. இந்தப் பிரச்சினை நேற்றோ இன்றோ ஏற்பட்டது அல்ல. இப்பிரச்சினை 1964ம்ஆண்டு திரு. டட்லிசேனநாயகா அரசு அமைந்தபோதோ, அதற்குச் சற்று முன்னரோ தான் தொடங்கியது.

தலைவர்: 1962ல்!

எம். சிவா: அப்போது டட்லிசேனநாயகா அரசு நடைபெற்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு ஒரு குழுவொன்று அமைக்கப்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல வழிகள் உண்டு. ஒருவரது பெயர் வாக்காளர் இடாப்பில் இருந்தால். அல்லது அவரிடம் பங்கீட்டுப் புத்தகம் இருந்தால். அல்லது இப்போது அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கிறது— இவற்றைக்கொண்டு அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் என்பதைத் தீர்மானிக்கலாம். குடியுரிமையை நிரூபிப்பதற்கு பல வழிகள் உண்டு. அந்நேரத்தில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக நாம் நினைத்தோம். ஆனால் இன்றைக்குக்கூட வடக்கு. கிழக்குக்கு வெளியேவாழும் தமிழரோ முஸ்லிமோ, ஒரு காணியையோ. சொத்தையோ வாங்கினால், அதைப் பதிவுசெய்வதற்கு பெரும்பாடுபட வேண்டியுள்ளது. இதிலே ஒருதீர்வுகாணுமாறு அமைச்சரை நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேர்சி சமரவீர (பிரதியமைச்சர்): காணிகளைப்பதிவு செய்வதில் இப்போதுள்ள முறையே சரியானது. இப்போது தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால் வாக்காளர் பட்டியலில் பெயர்பதிந்து இருப்பதை மாத்திரம் தக்க சாட்சியாக ஏற்றுக்கொள்வது சரியில்லை. வாக்காளர் பட்டியலை கிராம சேவகர்களே தயாரிக்கிறார்கள். அவர்களின் முடிவைக் காணிப்பதிவுக்கு ஏற்றுக்கொள்வது பாரதூரமான தவறுகளுக்கு இடமளிக்கும். அதனால்தான் அடையாள அட்டையும், பிறப்புச் சாட்சிப் பத்திரங்களும் காணிப் பதிவுக்குக் கேட்கப்படுகின்றன. (பாராளுமன்றம் 1.12.79)

# தமிழ்மொழியைவளர்ப்பதில் உலகத் தமிழர்களிடையே ஓர் ஒருமைப்பாடு வேண்டும்!

## மலேசியப் பிரமுகர் வீரப்பன் பேட்டி



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவரும், மலேசியத் தமிழ் இலக்கியக் கழகப் பொதுச்செயலாளருமான திரு. இரா. ந. வீரப்பன் இன்று 'சுதந்திரன்'' ஏட்டுக்கு அளித்த தமது பேட்டியில், உலகத் தமிழர்களிடையே வலுவான ஓர் ஒருமைப்பாடும். தமிழ் மொழியை முன்னிறுத்திய பண்பாட்டுணர்வும்உருவாக வேண்டும் என குறிப்பிட்டார்.

அவர் டிசெம்பர் 6ம் தேதி யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய பகுதிகளுக்கு விஜயம் செய்துவிட்டு, 13-ம் தேதி சென்னைக்குப் புறப்பட்டார். தமிழகத்தில் அவர் மதுரையில் 1980-ல் நடக்கும் 5-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உலகத் தமிழ் இலக்கியக் கண்காட்சி நடத்துவது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்ய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அரசின் உதவிகளைப் பெறவும் குறிப்பாக மொரிசியசில் நடைபெறும் 2-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழாவிற்குப் பயண உதவிகளைப்பெறும் நோக்கத்தில் அவர் அங்கு செல்வதாகக் கூறினார்.

### பண்பாட்டுத் தொடர்பு

இலங்கைத் தமிழ் நூல்களும், மலேசிய நூல்களும் மற்றும் தமிழர் வாழும் பல நாட்டுப் படைப்புக்களும் மதுரை மாநாட்டுக் கண்காட்சியில் வைப்பதுடன், இலங்கை—மலேசியா நாடுகளிடையே தமிழ் நூல்களைப் பண்டமாற்று அடிப்படையில் விற்பதற்கான ஏற்பாடுகளையும் அவர் ஆராய்வதாகச் சொன்னார். இலங்கை—மலேசியத் தமிழ் நாளேடுகளிடையேயும் ஓர் இணைப்புப் பாலமாக ஏடுகளை வாரந்தோறும் பரிமாறிக் கொள்ளும் முயற்சியை தாம் உண்டாக்கப் போவதாகவும் குறிப்பிடுகிறார். இலங்கை நாளேடுகள் மலேசியாவுக்கு அனுப்பப்படுவதாக அவர் கேள்விப்பட்டார், ஆனால் அங்கிருந்து ஏடுகள் அனுப்பப்படாத நிலையை மாற்றவும், மலேசிய ஏடாசிரியர்களைச் சந்தித்துப் பேசித் தக்க உதவிசெய்யப் போவதாகக் குறிப்பிட்டார்.

### மலேசியாவில் 9 இலட்சம் தமிழர்

ஒன்பது லட்சம் மலேசியத் தமிழர்களில் அறுபதாயிரம் ஈழத்தமிழர்கள் பெரும்பாலோர் பொருளாதார — கல்வி — தொழில் வாய்ப்புகளில் சிறப்புற்று இருப்பதால் அவர்கள் வேற்றுமை நீக்கப்பட்டு தமிழரிடையேஓரின ஒருமைப்பாடு ஏற்பட உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க காப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வி.டேவிட் போன்றவர்கள், மலேசிய பொதுப் பணி பயனீட்டுத் துறை அமைச்சரான ச. சாமிவேலு அவர்கள் பாடுபடுவதாக திரு. வீரப்பன் வலியுறுத்திக் கூறினார். அங்குள்ள தமிழர்களிடையே ஒற்றுமை வளர்ந்து வருகிறது என்றார் இவர்.

ஈழத்தமிழ்ப்படைப்புகளை மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பரப்புவதற்கு தமிழ் இலக்கிய கழகம் மலேசியாவில் 200க்குமேற்பட்ட நூல்களை சேகரித்துள்ளது என்றும், இதன் மூலம் இருநாடுகளுக்கிடையே நல்ல புரிந்துணர்வும். தமிழுறவும் உறுதியாக செயற்படும் என்று நம்புவதுடன், இளைஞர்கள், தமிழுடன் சமயத்தையும் கற்று பிடிப்புடன் வாழத்தீவிர இயக்கம் அங்கு நிகழ்வதாக அவர் சுட்டிக் காட்டினார். 1980ல் இங்கு நடைபெறும் இந்து சமய மாநாட்டில் மலேசிய நூல்கள் கட்டாயம் இடம் பெறும் என்கிறார்.

### மலேசிய அரசியல்

மலேசியத் தமிழர்களின் மிகப்பெரிய அரசியல் கட்சி மலேசிய இந்தியர் காங்கிரசாகும். இலங்கைத் தமிழர்களைப் பெரும்பாலும் கொண்ட கட்சி மலேசிய சிலோனியர் காங்கிரஸ். இந்தியர் காங்கிரசுக்கு நாடாளுமன்றத்தில் மூவர் உள்ளனர். இவர்களில் ஒருவர் முழு அமைச்சர் மற்றவர் துணையமைச்சர்; சிலோனியர் காங்கிரசுக்கு ஒருவர் செனட்டராக (டாக்டர் சின்னதுரை) நியமிக்கப்பட்டிருக்கிறார். மக்கள் முற்போக்குக் கட்சியின் சார்பில் எஸ். ராஜா செனேட்டர். அனைவரும் 10 கட்சி சேர்ந்த தேசிய முன்னணி என்ற ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள். எதிர்க் கட்சியில் (ஜனநாய செயல் கட்சி) மூன்று தமிழர் உள்ளனர். (வி.டேவிட், பி.பட்டு)

நாட்டின் மிகப்பெரிய கூட்டுறவு சங்கமான தேசிய நல நிதிக் கூட்டுறவு சங்கத்தில் ஒரு லட்சம் தமிழர் உள்ளனர். பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தோட்டங்களும், 20 கோடி வெள்ளி மதிப்புள்ள சொத்துக்களும் இதற்குச் சொந்தமானவை, இதனை அமைத்தவர் முன்னாள் (காலஞ்சென்ற) அமைச்சரான வீ. திருஞானசம்பந்தன். அண்மையில் காலமானவர் திரு. வெ. மாணிக்கவாசகம்.

மலேசியாவில் ஆரம்பத் தமிழ்ப் பள்ளிகளில் தமிழில் ஆறும் வகுப்புவரை கல்வி உண்டு. பல்கலைக் கழகம் வரை தமிழில் ஒரு பாடத்தையும் எடுத்துப்பயிலலாம்

மலேசியத் தமிழர்களைப் பற்றியும் அவர்களின் பிரச்சினைகள் தேவைகள் பற்றியும் ஈழத்தமிழேடுகள் அதிகமான செய்திகளை வெளியிட்டுப் போாதரவு காட்ட வேண்டும். என்ற கோரிக்கையையும் இதன் மூலம் அவர் விடுத்திருக்கிறார்.

# பிக்குகளையும் சிங்களவர்களையும் வடக்கே குடியேற்றவேண்டும்!

## தமிழர் பிரச்சினை தீருவதற்கு 'மாத்ருபூமி' கூறும் வழி

'வடக்கின் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு' என்ற தலைப்புடன் மாத்ருபூமி 1979 நவம்பர் இதழில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் உரை வருமாறு:—

அரசாங்கம் எதிர்பார்த்தவாறு அவசரகாலச் சட்டத்தாலோ ஆயுதப்படைகளினாலோ வடக்கில் பயங்கரவாதத்தை அழிக்கவோ, அடக்கவோ அல்லது குறைக்கவோ இயலவில்லை. நாளாந்தம் பெருகிவரும் கொலைகளுமே இதற்குச் சான்று.

இனவாதத்தை இல்லாமற் செய்யவடக்கே சிங்களவரையும். தெற்கே தமிழரையும் குடியேற்றும் ஜனாதிபதித்திட்டம் ஒரு பக்கத்தில் மட்டும் மிகவும் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. ஆம்! தெற்கில் தமிழர்கள் அணி அணியாக வந்து குடியேறிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் சிங்களவன் ஜனாதிபதியின் வடக்கில் சிங்களவரைக் குடியேற்றும் வரலாற்றுப் பெருமை மிக்க திட்டம் வெறும் பகற்கனவாகவே முடிந்துள்ளது,

ஜனாதிபதியின் வாக்குறுதிப்படி வடக்கே சிங்களவரைக் குடியேற்றும் திட்டம் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். இதுவே இனவாதம் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண ஒரேவழியாகும். சிங்களவர்களை வடக்கில் குடியேற்றும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு எமது சிங்கள மகாஜன பேரமுனை தனது முழு ஒத்துழைப்பையும் தர உறுதி பூண்டுள்ளது.

முதலாவதாக இனவெறியர்களால் தகர்த்தெறியப்பட்ட புனித சிங்கள பௌத்ததலங்களை புனருத்தாரணம் செய்யப்பட்டும் புதிய வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டும், பௌத்த குருமார் வடக்கே குடியேற்றுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் அங்கு செல்வதற்கு எமது இயக்கத்தைச் சேர்ந்த குருமார் தயாராக உள்ளனர்.

இரண்டாவதாக மேற்கூறிய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டும், அங்கு சென்று குடியேற்றங்கள் அமைத்தற் பொருட்டும் தேவையான மக்கள் சக்தியை பெற்றுத்தருவதை சிங்கள மகாஜன பெரமுனை உறுதிப் படுத்துகிறது.

"இவ்விரு அம்சங்களையும், நிறைவேற்றுதற் பொருட்டு ஜனாதிபதியவர்கள் எடுக்கும் துரிதநடவடிக்கை மக்களிடையே அவருக்குப் பெரும் புகழை ஏற்படுத்தும் என்பது உறுதி"

## ஒரு நிராயுதபாணியை கைதுசெய்வதற்கு 100 ஆயுதப்படையினர்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆயுதம் தரித்த நூறு இராணுவத்தினர் எனது தொகுதியிலுள்ள ஒரு கிராமத்துக்கு வந்தனர். அக்கிராமத்தின் பெயர் உடையார்கட்டு, ஏதோ ஒரு தேவைக்காக நிராயுதபாணியான கிராமத்தவர் ஒருவரை அவர்கள் கைது செய்தனர், அவர்கள் இதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 10, 12 டிறக்குகளில் வந்திறங்கினர். ஒருநிராயுதபாணியைப் பிடிக்க இரண்டு பொலிசார் போதாதா? 100 ஆயுதம் தரித்த இராணுவத்தினர் வேண்டுமா? இதுமட்டுமல்ல இரு இளைஞர்கள் இரண்டு வாரங்களுக்குமுன் எனது தொகுதியின் எல்லையிலுள்ள கிராமமொன்றில் கைது செய்யப்பட்டனர். இதற்காக 200 ஆயுதப்படையினர் யாழ்ப்பாணத்திலிருந்து வந்துபோக 200 மைல் டிறக்கில் ஓடியுள்ளனர்.

—பாராளுமன்றத்தில் சே மா. செல்லத்தம்பு




### காந்தி நீதிக் கலண்டர் 1980

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 மில்க்வைற் பார்சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற்-காந்தி நீதிக் கலண்டர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் த. பெ, எண். 77, யாழ்ப்பாணம்.

—1-ம் பக்கத்தொடர்

போராட்டத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டுள்ளோம்.

தணிக்கை......

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேசிய கெரில்லா விடுதலை இயக்கத்துடன் இணையும்" அனைத்துலகத் தமிழ்ச் சகோதரர்களே, எமது இயக்கத்தை வலிமைப்படுத்துவதற்காக எமக்கு உங்களது ஒத்துழைப்பைத் தாருங்கள். விவாதித்துவீழ்வதைவிட போராடி வாழ்வதே மேலானது."

இவ்வாறு எழுதியுள்ள 'மாத்ரு பூமி' இதழின் 1979 நவம்பர் மாத இதழில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடு எனக்குறிப்பட்ட நூலின் அட்டைப் படத் தோற்றம் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எமது வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக 'மாத்ரு பூமிப்' பத்திரிகையின் முன் பக்கத் தோற்றத்தையும் இங்கு பிரசுரிக்கின்றோம். இதன் அட்டைப்படம் இரு வர்ணத்தால் ஆனது எனவும், பின்புற அட்டையில் பயங்கர இயந்திரத்துப்பாக்கியின் படம் இடம்பெற்றுள்ளதாகவும் 'மாத்ருபூமி' கூறுகிறது. மேலும் அந்நூலில் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதையும் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு சிங்களத்தில் கவிதை ஒன்றினையும் பிரசுரித்துள்ளது 'மாத்ரு பூமி'

## ஆபீஸ் பையன்

தமிழர்—சிங்களவர் திருமண உறவு இருக்கும் வரை நாட்டைப்பிரிக்க முடியாதென்று கல்வியமைச்சர் பேசியிருக்கிறார், ஆனால் 1977 இனக்கலவரத்தின் போது தமிழ்ப் பெண்ணைத் திருமணம் முடித்ததற்காக எத்தனையோ சிங்களவர்களும், சிங்களப் பெண்ணைத் திருமணம் முடித்த எத்தனையோ தமிழர்களும் தெற்கே வாழ முடியாது அகதிகளாகக் கப்பலேறி வடக்கே வந்திறங்கியசோக வரலாறு அதற்குள்ளாகவா மறந்து போய் விட்டது என்று கேட்கிறான் நம் ஆபீஸ்பையன்.



## கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

ஜெமினி கணேசன்-சாவித்திரி

நடித்த

# குழந்தை உள்ளம்

## செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

12-வது வாரம்

சிவாஜி, சுஜாதா, விஜயகுமார், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, சத்தியப்பிரியா, சங்கீதா

நடித்த

# தீபம்

ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.